REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 7 காசுகள் (0—1—0) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 28உ புதன் (10—4—57) ★ ★ வெளியூர்: பங்குனி 29உ வியாழன் (11—4—57) [இதழ் 259

ஆலையூரார் நன்கொடை— 'கீழ்த்தரமான அச்சுறுத்தல்'

தொழிலதிபர் உதவி ஆளும் கட்சிக்கே கிட்டும்!

எதிர்க் கட்சி ஆக்கத்திற்கு இடையூறாகும்!

பொருளாதார நிபுணர் கருத்தளிக்கிறார்

கல்கத்தா, ஏப். 9—

"அரசியல் கட்சிகளுக்கு தொழில் நிறுவனங்கள் பெருந்தொகை வழங்குவதை 'கீழ்ந்தரமான அச்சுறுத்தல்' எனலாம்"

இவ்வாறு சிறந்த பொருளாதார நிபுணரான ஏ. டி. கோர்வாலா என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்கத்தா சுழற்கழகத்தில், 'இன்றைய இந்தியச் சூழ்நிலை' எனும் பொருள் பற்றிப் பேசினார்.

"அரசியல் கட்சிகளுக்கு தொழில் நிறுவனங்கள் பணம் கொடுப்பதன் விளைவாக, இரு சாராரும் இழிந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவர்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அது, மக்களுக்குத் தீமை தரக்கூடியது. அதுவுமன்றி, அவ்வாறு பணமளிக்கும் தொழில் நிலையங்களுக்கு மக்களிடம் மதிப்புக் குறைவும் ஏற்படும்.

"அத்துடன், தொழில் நிலையங்களால் அவ்வாறு தரப்படும் பண உதவி, பெரும்பாலும் ஆளும் கட்சியைப் பயன்படுத்துவதாக இருக்கக்கூடும். அதன் பலனாக சிறந்த சனநாயக எதிர்ப்பு வளம் பெருவதற்குத் தடையாகி விடும்."

சென்னையின் பங்கு ரூ. 32 கோடியாம்!

மாநிலங்களின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் 2-வது ஆண்டுத் திட்டங்கள் பற்றிய மொத்தமான தகவல்கள் இப்போது கிடைத்துள்ளது. அதன்படி மொத்தம் சுமார் ரூ. 435 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இதில் மத்திய சர்க்கார் பொறுப்பிலுள்ள பகுதிகளின் திட்டச் செலவுகள் சேர்க்கப்படவில்லையாம்.

1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதைவிட இது ரூ. 20 கோடி அதிகமாகும்.

தென் இந்திய மாநிலங்களுக்கான செலவுகள் பற்றிய விவரங்கள் வருமாறு:—

சென்னை—ரூ. 32 கோடி; ஆந்திரம்—ரூ, $34\frac{1}{2}$ கோடி; கேரளம்—ரூ. $17\frac{1}{2}$ கோடி; மைசூர்—ரூ. $28\frac{1}{4}$ கோடி.

பண்ணை அபிவிருத்திக்கு 5-கோடி பவுன்கள்!

பிரிட்டனிலுள்ள பண்ணைகள் அபிவிருத்திக்காக சுமார் 5-கோடி பவுன்களை அடுத்த பத்தாண்டுகளில் செலவிட பிரிட்டிஷ் சர்க்கார் நிச்சயித்திருக்கிறார்கள்.

சிறு பண்ணைகள் நிலைத்து இலாபகரமாகச் செயலாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

இதை அனுமதிக்கும் மசோதாவை நிறைவேற்ற பார்லிமெண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உதவியாக இருக்கிறார்கள்.

'விருந்தும் உபசாரமும் முக்கியமல்ல'

'பொறுப்புடன் அலுவல்களைக் கவனிக்க இயலாது'

குறைந்தது இன்னும் மூன்று மாதங்களுக்கு கேரள மாநிலத்தில் பதவியேற்றிருக்கும் அமைச்சர்கள் பொதுக் கூட்டங்களுக்கோ, பாராட்டுக் கூட்டங்களுக்கோ, விருந்துக்களுக்கோ செல்லமாட்டார்கள்.

அமைச்சர்கள் அரசாங்க அலுவல்களைக் கவனிக்கவேண்டிய பொறுப்பில் ஈடுபட்டிருப்பதே இதற்கு முக்கியக் காரணமாகும்.

விருந்துபசாரக் கூட்டங்களில் அமைச்சர்கள் கலந்துகொண்டால் திறமையாகத் தங்கள் அலுவல்களைக் கவனிக்க இயலாமல் போய்விடுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சட்ட மன்றங்களில் பெண் உறுப்பினர்கள்

எண்ணிக்கை உயருகிறது

புதுடில்லி, ஏப். 10—

சமீபத்தில் நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் அனைத்தும் வெளியான பிறகு மாநில சட்டசபைகளிலும், இந்தியப் பாராளு மன்ற(மக்கள் சபை)த்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

மக்கள் சபைக்கு 27 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; இதற்குமுன், 21 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர்.

மாநில சட்டசபைகளுக்கு 195 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; முன்பு மொத்தம் 80 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர்.

அதிகப்படியான பெண் உறுப்பினர்களைக்கொண்ட சட்டசபை பீகார் ஆகும். இங்கு மொத்தம் 32 பெண் உறுப்பினர்கள் உள்ளனர்.

கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தால்!

எதிர்க் கட்சி இயங்க முடியாதாம்!

மாற்று சர்க்கார் அமைப்பதற்கும் அனுதிக்கமாட்டார்களாம்!

கேரளப் புதுமை குறித்து லண்டன் 'டைம்ஸ்'

லண்டன், ஏப். 9—

"கம்யூனிஸ்டுகள் தனியாக அதிகாரத்திற்கு வருவார்களேயானால், அவர்கள் ஒரு வலுவான எதிர்க்கட்சி இயங்குவதை அனுமதிக்க மாட்டார்கள்; தங்கள் கட்சி ஆட்சி வேறொரு கட்சிக்குச் செல்வதை ஒருக்காலும் அனுமதிக்கவே மாட்டார்கள்.

"ஹங்கேரி இதை நிரூபித்துள்ளது; கொடிய மிருகத்தனமான வகையில் எடுத்துக்காட்டியுள்ளது. மாஸ்கோவும் பிகிங்கும் இதை மிகச் சிரேஷ்டமான தத்துவம் என்று உறுதி செய்திருக்கின்றன"

என்று, லண்டன் 'டைம்ஸ்' இதழ் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

முரண்பட்ட அறிக்கைகள்

மேலும் அந்த இதழ் எழுதியிருப்பதாவது:—

"கேரளம் ஒரு மாநில சர்க்காராகவே இருக்கும். அதற்குள் முதன்மந்திரி நம்பூதிரிபாத் சில முரண்பட்ட அறிக்கைகள் விடுத்துள்ளார்.

"ஒருபுறம் வெளிநாட்டவருக்குச் சொந்தமான தோட்டங்களை தேசீயமயமாக்குவோம் என்றும், மறுபுறம், நியாயமான பேரத்துடன் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளை வரவேற்போம் என்றும் அவர் கூறியிருக்கிறார்; இவை டெல்லியில் உள்ள திட்டக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டாக வேண்டிய விஷயங்களாகும்.

இந்தோனேஷியா

"சுகர்ணோவின் நிபுணர்கள அடங்கிய மந்திரிசபையில் தங்களுக்குப் பங்கு கிடைக்கலாம் எனக் கம்யூனிஸ்டுகள் எதிர்பார்க்கலாம்.

"கேரளத்திலும், இந்தோனேஷியாவிலும் அவர்கள் தங்களை யோக்கியமானவர்கள்—குற்றமற்றவர்கள் என்று பிறர் கருதக்கூடிய வகையில் நடந்துகொள்வார்கள்.

எப்படியானாலும்

"இந்தியாவிலோ அல்லது இந்தோனேஷியாவிலோ கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் எப்படியிருந்தாலும், அந்த நாடுகளில் உள்ள வாக்காளர் ஒன்றை மறந்துவிடக்கூடாது. ஒரு முறை கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வர அனுமதித்து விட்டால்-அது அரசியல் சட்டரீதியான வழிகளின் மூலமாயினும்கூட, பின் வாக்காளருக்கு மற்றுமொரு சர்க்காரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அற்றுப் போய்விட்டது என்றுதான் பொருள்."

வரிகள் குறைகின்றன— இங்கல்ல — பிரிட்டனில்!

லண்டன், ஏப். 9—

1957—58-ம் ஆண்டுக்கான பிரிட்டனின் வரவு-செலவுத் திட்டத்தில் 10 கோடி பவுன் அளவுக்கு வரிகள் குறைக்கப்பட்டிருக்கிறது.

முதியவர்கள், நடுத்தர வருமானமுள்ளவர்கள், குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு சலுகைகள் தரப்பட்டிருக்கிறது.

சூயஸ் கால்வாய் தகராறின் போது அதிகப்படுத்தப்பட்ட ஒரு ஷில்லிங் பெட்ரோல் வரி குறைக்கப்பட்டுள்ளது.

தட்டுமுட்டுச் சாமான்கள், விரிப்புகள், மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரி குறைக்கப்பட்டிருக்கிறது. நாடகங்களுக்கு விதிக்கப்பட்ட கேளிக்கை வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

'புதியகாசு'கள் என்றே சொல்லுங்கள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

சர்க்காரின் நேர்மையற்ற போக்கிற்குக் கண்டனம்

8—4—57-ல், சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்திருக்கிறது. பிற்பகுதி இங்கு தரப்படுகிறது:—

ஒரு கட்சிக்கு மட்டும்

"பண்டித நேரு சென்னைக்கு வந்தார்; கூட்டம் ஒன்றில் பேசினார்; தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்தார்; ஐலண்டு மைதானத்தில், அந்தக் கூட்டம் நடைபெற்றது.

"கூட்டத்தை ஏற்பாடு செய்தது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

"வேறெந்தக் கட்சிக்கும் தரப்படாத ஐலண்டு மைதானம், காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் தரப்படுவானேன்?

"நாம், அங்கு கூட்டம் நடத்த அனுமதி கேட்டால் மறுக்கிற சர்க்கார், காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் அனுமதி தருவானேன்?

"பண்டிதர், பிரதமர் என்ற தோரணையில் அந்தக் கூட்டத்தில் பேசினால்—அதற்காக மைதானம் தரப்பட்டிருந்தால் அதில் நியாயமிருக்கலாம்; ஆனால், காங்கிரஸ் தலைவர் என்ற தோரணையில், காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்யும் கூட்டத்தில் அவர் பேசினார்; அதற்கு மைதானம் தந்தார்கள்—மற்றவர்களுக்குத் தர மறுக்கிறார்கள். இது நியாயமா? ஜனநாயகமா?

அது மட்டுமா?

"அது மட்டுமல்ல; அந்தக் கூட்டத்திற்கு மேடை அமைத்துத் தந்தது, சர்க்காரின் மராமத்து இலாகா—ஒளி விளக்குகள் பொருத்தித் தந்தது, சர்க்காரின் மின்சார இலாகா—ஒலிபெருக்கி அமைத்துத் தந்தது, விளம்பர இலாகா—என்று செய்திகள் வந்தன. சர்க்காரின் இலாகாக்கள் ஒரு கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. மற்றக் கட்சிகளுக்கு இந்த வாய்ப்பும் வசதியும் தராத சர்க்கார்—தர மறுக்கிற சர்க்கார், காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் இந்த வசதிகளைத் தேடித் தந்ததே! இது நியாயமா? ஜனநாயகமா?

இதுமட்டுமல்ல!

"இதுமட்டுமல்ல நண்பர்களே! 'காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்' என்று பிரச்சாரம் செய்வதற்காக அந்தக் கட்சியினருக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—4—57 புதன்

சர்க்கரை இனிக்கவில்லை!

★

சர்க்கரை உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரித்திருக்கிறது என்ற செய்தி இனிப்பாகத்தான் இருக்கவேண்டும்.

ஆனல்......!

இந்தியா முழுமையிலுமாக உற்பத்தியாகிற சர்க்கரையில் நூற்றுக்கு எழுபது பங்கிற்கு மேலாக வடநாட்டு மாநிலங்களான உத்திரப்பிரதேசம், பீகார் ஆகிய இரண்டு மாநிலங்களில் மட்டும் உற்பத்தியாகிறது.

உற்பத்தியில் மிகப்பெரும் பகுதி வடநாட்டில் என்றல், ஏற்றுமதியில் பெரும்பகுதியும் வடநாட்டிலிருந்துதான் என்பது கூருமலே விளங்கும்.

வடநாட்டில் இந்த சர்க்கரை உற்பத்தித் தொழில் பெருகி இருப்பதும், தொழில் வளம் காரணமாக ஏற்றுமதி செய்கிற அளவுக்கு உற்பத்தி மிகுந்திருப்பதும் வடநாட்டவரைப் பொறுத்து இனிப்பான உண்மைகள்தான்.

தென்னட்டவருக்கு 'இந்தியா'வில் சர்க்கரை உற்பத்தி ஏற்றுமதி செய்கிற அளவுக்கு — ஏற்றுமதியின் அளவு நாளுக்கு நாள் விரிவாகிற அளவுக்கு — அதிகரித்திருக்கிறது என்ற செய்தி இனிப்பதற்கில்லை. மேலும், தென்னட்டில் சர்க்கரை உற்பத்தித் தொழில் வளருவதில் டில்லிப் பெரியவர்கள் முகம் கோணுகிறர்கள் என்பதும் செய்தி கசப்பதற்குக் காரணமாகும்.

தென்னட்டில், தோன்றியுள்ள சர்க்கரை ஆலைகளும் உற்பத்தியைத் துவங்குமானல், தேவைக்கு அதிகமாக ஆண்டு தோறும் ஒன்றே முக்கால் இலட்சம் டன் உற்பத்தி அதிகரிக்கும் என்ற போலி காரணத்தைக் காட்டி, தென்னட்டவரின் கசப்பை மாற்ற டில்லிப் பெரியவர்கள் முயலுகிறர்கள்.

வடநாட்டில் இலாபகரமாக நடைபெருத சர்க்கரை ஆலைகளை எல்லாம்கூட விரிவுபடுத்தவும், ஒரு ஆலையின் குறைந்த பட்ச உற்பத்தி சக்தியை ஆண்டொன்றுக்கு 800 டன் என்று வரையறுக்கவும் அனுமதி தந்து ஊக்குவிக்கிற டில்லி, தென்னட்டில் சர்க்கரை உற்பத்தித் தொழிலுக்கு முட்டுக்கட்டை போடுவது—தடை விதிப்பது ஏன் என்பது 'ஏக இந்தியா'க்களுக்குப் புரியாமலிருக்கலாம்! ஆனல், டில்லியின் பொதுவான—தென்னடு தொழில் வளம் பெறக்கூடாது என்ற தீய நோக்கம்தான் இந்தப் போக்கிற்கும் காரணம்.

'இந்தியாவில் சர்க்கரை உற்பத்திப் பற்றுக்குறை நிலையிலிருந்து ஏற்றுமதி நிலைக்குப் பெருகியுள்ளது' என்று ஆனந்தக் கூத்தாடுகிறர்கள்; மேலும், 'உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு' என்று, சுவைத்து அனுபவித்துச் செய்தி தருகிறர்கள். அவர்கள்தான், தென்னட்டில் உற்பத்தி, தேவையைவிட அதிகரித்துவிடும் என்று பயம் காட்டி, தொழில் வளரக் கூடாது என்று பேசுகிறர்கள். இந்தக் கூற்றில், 'தென்னட்டில் தொழில்களே கூடாது' என்ற அந்தப் பெரியவர்களின் வஞ்சக நோக்கத்தின் சாயல் தெற்றெனத் தெரியவில்லையா?

இலாபகரமாக நடைபெற முடியாத வடநாட்டு சர்க்கரை ஆலைகளுக்கு உதவியும் தந்து அந்த ஆலையின் உற்பத்தி சக்தி பெருகவும் வழிசெய்து தருபவர்கள்—ஏற்றுமதிக்கு இன்னும் நிரம்ப வாய்ப்பு இருக்கிறது என்று பூரிப்போடு பேசுபவர்கள், தென்னட்டில் மட்டும் அந்தத் தொழில் விரிவடையக் கூடாது என்று கூறுவதற்கு, ஏகாதிபத்திய நோக்கம்தான் காரணமாயிருக்க முடியுமே தவிர, வேறென்ன?

மேலும், வடநாட்டில் இரண்டு மாநிலங்களில் மட்டுமே மொத்த உற்பத்தியில் எழுபது சதவிகிதத்திற்கு மேல் உற்பத்தியாகும்போது, இனி புதிதாக வேறு, வடநாட்டிலேயே ஆலைகளை நிறுவ அனுமதிப்பதும், தென்னட்டில்ஆலைகள் நிறுவ மறுப்பதும் எந்த நியாயத்திற்குக்கட்டுப்பட்ட செய்கைகளோ நமக்குத் தெரியாது.

வடநாடு மட்டும் சகல தொழில்களையும் பெற்றுப் பெருகவும், தென்னடு தொழில்கள் அற்று வாடவும் திட்டமிட்டுச் செயலாற்றும் டில்லியின் இந்தப் போக்கு, சுத்த சமத்துவம் பேசுகிற 'ஏக இந்தியா'க்களுக்குத்தான் வெளிச்சம்.

அதனல்தான் சர்க்கரை ஏற்றுமதி அதிகரிக்கிறது என்பதும், உற்பத்தி பெருகுகிறது என்பதும் தென்னட்டவருக்கு இனிப்பான செய்திகளாக இருக்கமுடியவில்லை — இருக்க முடியாது. உற்பத்திப் பெருக்கமும், ஏற்றுமதியால் கிடைக்கும் இலாபமும், வடநாட்டவருக்கே தவிர, தென்னட்டவருக்கா?

இதில், தென்னட்டவர் இனிப்பானது என்று கருதக்கூடியது எல்லாம், ஏற்றுமதி அதிகரிக்கிறது என்ற நிலை, உள்நாட்டில் பண்டத்தின் விலை ஏற்றத்திற்குக் காரணமாயிருக்கவில்லை என்ற பகுதிதான். இதுவும் நிரந்தரமானதோ அல்லது தற்காலிகமானதோ? யார் கண்டார்கள்?

ஒரிசாவில் இரும்புக் கனிப் படிவங்கள்

2,000 அடி உயரமுள்ள மேட்டுப் பகுதியில் இருக்கிறதாம்

புதுடில்லி, ஏப். 9—

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த மாவட்டமொன்றில் இரும்புக் கனியும், பீங்கான் பாண்டங்கள் செய்வதற்குப் பயன்படும் களிமண், மாங்கனீஷ்யம் சிலிகேப் முதலியன உள்ள சுரங்கங்கள் இருப்பதாக பூகர்ப்ப ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

2,000 அடி உயரமுள்ள மேட்டுப்பகுதியில் இவை இருக்கிறதாம்.

கதர் திட்டத்திற்கு வாரி இறைக்கப்படும் பணம்

விழலுக்கு இரைக்கும் நீரே!

ஆங்கில ஆட்சி அகன்ற பிறகும் திட்டம் கைவிடப்படாதது விந்தையிலும் விந்தையே!

' காங்கிரசுக் கட்சியின் கோள்கைகளில், கதருக்கு ஒரு முக்கியமான இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலேய ஆட்சியினரோடு, போராடுவதற்காகக் காந்தியடிகளால் உருவாக்கப்பட்ட கருவிகளுள் ஒன்றன கதர், இந்தியா முழு அரசியல் விடுதலை பெற்ற பிறகும் கைவிடப்படாமல் செயலாற்றப்படுவது விந்தையினும் விந்தையாகும் ''

என்று, 'பிடிவாதத் திட்டம்' என்ற தலைப்பில், 3—4—57 'தமிழ் நாடு' இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து கூறுவதாவது:—

"இப்பிடிவாதக் கதர்த் திட்டம், காந்தியடிகளின்பால் காட்டப்படும் தீவிர அன்பின் அறிகுறி என்று கொள்ளலாமேயொழிய, நாட்டின் சிறப்பான பொருளாதார நலனுக்குக் காட்டும் அஞ்சலி என்று கூற இயலாது.

"ஏனென்றல், நம்முடைய நாட்டுப் பொருளாதாரப் பேராசிரியர்களும், நிதி நிபுணர்களும், இக்கதர்த் திட்டத்தைப் பயன்தரும் ஏற்பாடு என்று கருதாமல், வீண் விரயச் செயலென்றே கூறி வந்துள்ளார்கள்.

"ஆனல், காங்கிரசுக் கொள்கையின்படி திட்டம் வகுக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட திட்டக் குழுவினர், இதற்காகப் பெருந்தொகைகளை ஒதுக்க வேண்டிய கடமையை மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது.

"மொத்தக் கணக்கை வைத்துக் கொண்டு பார்த்தால் அவ்வளவு பெருந்தொகைகள் என்று கூற முடியாதென்றலும், நாடு உள்ள நிலைமையையும் கதருக்குள்ள தன்மையையும் ஆழ்ந்து கவனித்தால், பொருள் வீணவதை குறித்து வருத்தமுருமல் இருக்க முடியாது.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கதருக்காக வீணக்கப்பட்ட பொருளைக் குறிப்பிடலாம்.

"**1951—55**-ம் ஆண்டுகளில், ரூ **4,90,00,000** வீணக்கப்பட்டது; **1955—56**-ம் ஆண்டில் ரூ. 3½ கோடி விரயமாயிற்று.

"முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் விழலுக்கிரைத்த நீரான ரூ. **8,40,00,000**-த்தோடு நின்றுவிடவில்லை. இரண்டாவது திட்டகாலத்தில் இத்தொகை ஏறத்தாழ இரட்டித்துவிட்டது; ரூ. **16,70,00,000** இதற்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

"இத்தொகை திட்டத்திற்காக மட்டும் அளிக்கப்படுகிறது; திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு வேறு நிதிகள் ஒதுக்கப்படும். அனைத்திந்திய கதர்-கிராம கைத்தொழில் குழு, இயக்கும் மூலதனம் என்ற தலைப்பில் ரூ. 28½ கோடி வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அனைத்திந்தியக் குழுவின் ஆதரவில் செயலாற்றப்படும் திட்டத்தோடுகூட, மாகாண அமைச்சர்களுடைய ஆலோசனையின்மீது வேறு சில திட்டங்களும் செயற்படுத்தப்படலாம்.

"இத்துறையில், கதர்-கிராமத் தொழில்கள் ஆகியவற்றிற்கு மத்திய அரசாங்கம் ரூ. 4 கோடியும், மாகாண அரசாங்கங்கள் ரூ. 51½ கோடியும் ஒதுக்கி வைத்துள்ளன."

ஜமுக்காளம் நெய்ய ஒரு பயிற்சிக்கூடமாம்

சென்னை அரசாங்கத்தின் முடிவாம்

சென்னை, ஏப். 7—

திருநெல்வேலி மாவட்டசேரன்மாதேவி பகுதியில் ஜமுக்காளங்கள் நெய்வதற்கு ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம். இங்கு 12 பேர்களுக்கு ஓராண்டுக் காலம் பயிற்சியளிக்கப்படுமாம். அவர்களுக்கு மாதம் ரூ. 30 உதவி ஊதியம் தரப்படுமாம்.

ரூ. 44 கோடி மூலதனமுள்ள தொழில்

40,000 பேர் பணியாற்றுகின்றனர்

இந்தியாவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவைப்படக்கூடிய மிகவும் முக்கியமான கட்டுமான சாதனங்களில், உருக்குக்கு அடுத்தபடியாக சிமெண்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து விளங்குகிறது. நாட்டின் மொத்த சிமெண்டுத் தேவை 1949-51-ல் ஆண்டொன்றுக்கு 26 இலட்சம் டன்னக இருந்தது. 1956-57-ல் ஆண்டொன்றுக்கு 100 இலட்சம் டன்னக அதிகரித்திருக்கிறது.

1947-ல், நாடு பிரிவினையடைந்ததை அடுத்து, இந்தியாவில் மொத்தம் 21 இலட்சம் டன் உற்பத்தி சக்தி வாய்ந்த 18 சிமெண்டுத் தொழிற்சாலைகள் இருந்தன. தற்போது அவைகளின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்திருக்கிறது; அவைகளின் மொத்த உற்பத்தி சக்தி 49 இலட்சம் டன்.

சிமெண்டுத் தொழிலில் 1950—51 வரையில் மொத்தம் ரூ. 29 கோடி முதலீடு செய்யப்பட்டிருந்தது. 1955 எப்ரலில் புதிய உற்பத்திப் பிரிவுகளுக்கும் விஸ்தரிப்புக்குமாக மேலும் ரூ. 15 கோடி முதலீடு செய்யப்பட்டது. 1961 வாக்கில் இத்தொழிலில் சுமார் ரூ. 75 கோடிக்கு முதலீடு செய்யப்பட்டிருக்கும்

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் சிமெண்டுத் தொழிற்சாலைகளில் மொத்தம் சுமார் 33,000 தொழிலாளர்கள் வேலை செய்தனர்; தற்போது அவர்களின் எண்ணிக்கை சுமார் 40,000-க்கு அதிகரித்திருக்கிறது. 1960-61 வாக்கில் இத்தொழிலில் சுமார் 75,000 பேர் வேலை செய்வார்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா தவறினல் அபாயம் நேருமாம்!

"கம்யூனிஸ்டு சார்பற்ற உலகப் பகுதியினருக்கிடையே பொருளாதார—அரசியல் இணைப்புகளை நிறுவுவதற்கு அமெரிக்கா தவறினல் இதுவரையில் காணுத பயங்கர நிலையை அமெரிக்கா எதிர் நோக்கவேண்டியிருக்கும்" என்று, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் டல்லஸ் குறிப்பிட்டிருக்கிறர்.

கருணாநிதியின் அவதூறு வழக்குமுடிவு

'தமிழ் சினிமா' என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியரான ஏ. கரீம் என்பவர், தோழர் மு. கருணாநிதியைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் அவருக்குள்ள தொடர்பு பற்றியும், அவதூறன முறையில், உண்மைக்குப் புறம்பானவற்றை எழுதி வெளியிட்டதன் காரணமாக, தோழர் மு. கருணாநிதி அந்த நபரின் பேரில் இரண்டாயிரம் ரூபாய் நஷ்டஈடு கேட்டு சென்னை இரண்டாவது உதவி சிவில் நீதிபதி அவர்களின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கு விசாரணைக்கு வருமுன்பு பிரதிவாதியாகிய 'தமிழ் சினிமா' என்கிற அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் கீழ்க்கண்டவாறு எழுதிக்கொடுத்தார்:—

"பிரதிவாதியாகிய நான் வாதியின் பேரில் தனிப்பட்ட முறையிலும்; பத்திரிகையாளர் என்கிற முறையிலும் மிக உயர்ந்த மதிப்பு வைத்திருக்கிறேன். வாதியை தனிப்பட்ட முறையிலும், பொதுவாழ்வுத் துறையிலும் தாக்கவோ அல்லது அவரை புண்படுத்தவோ நான் என்றும் நினைத்தது கிடையாது. நான் எழுதியவைகள் எனக்குத்தெரிந்த விஷயங்கள் அல்ல. என்னுடைய எழுத்துக்கள் வாதியின் கௌரவத்தை என்றுமே தாழ்த்தும் நோக்கம் கொண்டவை அல்ல. வாதியின் ஒழுக்கத்திலும், பண்பிலும், நேர்மையிலும், தலைமையிலும் நான் மிக உயர்ந்த மரியாதை வைத்திருக்கிறேன். பொது மக்கள் மதிப்பீட்டில் வாதியின் கௌரவத்தை குறைக்க வேண்டுமென்று நினைத்ததுமில்லை; நினைக்கப்போவதுமில்லை."

இவ்வாறு நீதிபதி அவர்களின் முன்பு எழுதிக் கொடுத்து கையெழுத்திட்டுத் தந்ததின் பேரில் வழக்கு மேற்கொண்டு நடத்தப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது.

தோழர் மு. கருணாநிதியின் சார்பில் வழக்கறிஞர் திரு. பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்கள் வழக்கை நடத்தினர்கள்.

கல்வி நிலையங்கள்

அவசரப்பட்டு நடவடிக்கைளடுக்க விரும்பவில்லையாம்

கேரள முதலமைச்சர் தகவல்

"கல்வி நிலையங்களை மேற்கொள்வதற்கு சர்க்காருக்கு உத்தேசமுண்டா?' என்று கேரள முதலமைச்சரை வினவியபோது அவர் கூறியிருப்பதாவது:—

"கல்வி முறை முழுவதையுமே சர்க்கார் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது நன்மையானதாகும்; ஆனல் இதற்குச் சில தடைகள் எற்படும். இப்பிரச்சினையில் நாங்கள் அவசரப்பட்டு நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை; ஏனெனில் சிலருடைய மத உணர்ச்சியை நாங்கள் புண்படுத்த விரும்பவில்லை. எனினும் தனியார் நிறுவனத்திலுள்ள தீமைகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுப்போம்."

சென்னை பஸ்களில் பெண்களுக்கு இடம்

சென்னை, ஏப். 8—

சென்னை நகரத்தில் ஓடும் அரசாங்கப் பஸ்களில் இனி ஐந்தில் ஒரு பங்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கி வைக்கப்படும் என்றும், பஸ்களில் எல்லோரும் பின்வழியாகவே உள்ளே செல்லவேண்டும் என்றும், இறங்குவதற்கு மட்டும் முன் வழியைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'காங்கிரசார் ஓட்டுகளை வாங்கினார்கள்-நாம் வாக்குகளைப் பெற்றோம்'

தேர்தல் வெற்றி குறித்து க. அன்பழகன், அ. பொன்னம்பலனார் முழக்கம்

7—4—57 இரவு 7 மணியளவில், சென்னை—எழும்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி, சென்னை—கோமளீசுவரன்பேட்டை (31-வது வட்டம்) தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாப் பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய தோழர்கள் அ. பொன்னம்பலனார், க. அன்பழகன் ஆகியோரின் சொற்பொழிவின் தொகுப்பு இங்கே தரப்படுகிறது :—

அ. பொன்னம்பலனார் :

"நாம் தேர்தலுக்கு நிற்கும் போது வெற்றியைப் பற்றி கவலைப்படாமல்தான் ஈடுபட்டோம். நாம் தோற்றுவிட்டதாலேயே நமது எதிர்காலப் பணியை நிறுத்திக்கொள்ளவில்லை — நிறுத்திக் கொள்ளமாட்டோம். நாம் இந்த நாட்டுக்கு, நமது உழைப்பை—நமது தொண்டை உயிருள்ளவரை செய்துவருவோம்; மனித அருவம் மறையாதவரையிலும் பாடுபட்டுவருவோம்; இந்த நாட்டில் அடிமை மனப்பான்மை நீங்காதவரையிலும் உழைத்துவருவோம்.

"தேர்தலில் ஈடுபட்ட நாம், மக்களிடம் சத்தியத்தைக் காட்டி—அகிம்சையை கடைப்பிடித்து — காந்திய முறையில் ஓட்டுகளைப் பெற்றோம்; ஆனால் காங்கிரசார் மக்களிடம் அதிகாரத்தைக் காட்டி—பணத்தை இலட்சம் இலட்சமாக செலவு செய்து ஓட்டுகளை வாங்கினார்கள். நாம் வாக்குகளைப் பெற்றோம்; அவர்கள் 'ஓட்டு'களை வாங்கினார்கள்.

"நமக்குள்ள மக்கள் சக்தியை—மக்களிடம் நமக்குள்ள ஆதரவை தெளிவாக இத்தேர்தல் காட்டியிருக்கிறது. இதற்கு நாம் உழைப்பைத்தான் செலவிட்டோம். நம்முடைய இடைவிடாத தனியாக ஆர்வம்—சலியாத உழைப்பு வெற்றிபெற்றது.

"இந்தத் தேர்தலில் இராசாசர் முத்தையா செட்டியார் காங்கிரசில் சேர்ந்தால் வெற்றி பெறலாம் என்று நினைத்துத்தான் காங்கிரசில் சேர்ந்தார்; தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார். ஆனால் முன்னால் நடைபெற்றத் தேர்தல்களில் ஓட்டுக் கேட்டறியாத இராசாசர். அவர்கள், இத்தேர்தலில் ஒவ்வொரு கிராமமாக சென்றும் ஒவ்வொரு தெருவிற்குச் சென்றும், ஒவ்வொரு வீடு—கடைகளுக்கும் சென்று 'நான்தான் தேர்தலுக்கு நிற்கிறேன்; காங்கிரஸ் சார்பில் நிற்கிறேன்; எனக்கு ஓட்டுபோடுங்கள்,' என்று கேட்டார்—ஒவ்வொரு இடத்திலும் கேட்டார். அவர் என்னதான் காங்கிரசில் சேர்ந்திருந்தாலும் ஏராளமான பணத்தைச் செலவிட்ட பின்னர்தான் வெற்றிபெற முடிந்தது. நாட்டில் நிலை அவ்வாறு இருக்கிறது.

"இப்பொழுது நாம் தோற்றாலும், எதிர்காலத்திலே நாம் வெற்றி பெறுவோம். நம்மைத் தோற்கடிக்க மாற்றார்கள் பெரும் பாடுபட்டார்கள். நமது பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 207 ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியுற்றார். அங்கு, மந்திரிமார்களெல்லாம் சென்றார்கள்; பெரியார் சென்று தீவிர பிரசாரம் செய்தார்; கம்யூனிஸ்டுகள் நமக்கெதிராக முழு மூச்சாக பாடுபட்டார்கள்; இவ்வளவும் பிறகுதான் காங்கிரஸ் வெற்றிபெற முடிகிறது—அதுவும் நம்மை 207 ஓட்டுகளால் மட்டுமே தோற்கடிக்க முடிந்தது.

"நாம் பெற்ற வெற்றிக்கு மகிழ்ச்சியடைகிறோம். தோற்றதற்காக வெட்கப்படவில்லை. இனியும் பாடுபடுவோம்; ஜனநாயக முறைப்படி சட்ட மன்றத்திலும் பாடுபடுவோம்; திராவிட நாடு பெறும்வரை பாடுபடுவோம்.

"அடுத்த ஐந்தாண்டு காலத்தில் இந்தத் தேர்தலில் வயதிருந்தும் வாக்குரிமை இல்லாமலிருந்த மக்களை ஓட்டர்களாகும்படிச் சொல்லுவோம். மற்றும் உழைப்பாளிகள்—விவசாயிகள் — நெசவாளர்கள் ஆகியோரையும் ஓட்டர்களாக்கும் பணியில் தீவிரமாகப் பாடுபடுவோம்.

"பொருளாதார சமத்துவம் பெறவும், அரசியலில் அடிமைத்தனம் நீங்கவும், சமுதாயம் மறுமலர்ச்சியடையவும் ஆன பணியை செய்வோம்!

★

க. அன்பழகன்

"நாம் நமது கடமையை தவறாமல் செய்து வருவோம். கடமையாற்றவேண்டிய காங்கிரசார், கடமை எது என்பதைத் தெரியாமல் அதை ஆற்றத் தவறிவிட்டார்கள்—அந்தக் கடமையை நாம் ஆற்றி வருகிறோம்.

"நாம், நமது கொள்கை பலத்தால்தான் தேர்தலில் வெற்றி பெற்றோம். நமது தூய கொள்கைகளுக்கு மக்கள் பேராதரவு அளித்ததால்தான் வெற்றி பெற்றோம்.

"நம்முடைய தொண்டு அருமையான ஜனநாயகத்தை பாதுகாக்கவே பயன்பட்டது; மற்றவர்கள், ஜனநாயகக் கடமையை பாதுகாக்க தவறிவிட்டார்கள். ஆனால் அவர்களும் மக்களின் ஆதரவு பெற்றுதான்—மக்கள் சக்தியைப் பெற்றுத்தான் ஆட்சிக்கு வந்தார்களே தவிர, மக்களுக்கு எது தேவையோ அதை செய்யவில்லை; மக்களின் எழுச்சி மதிக்கப்படவில்லை.

"1938-ம் ஆண்டிலிருந்து இந்தியை நுழைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். நாம் அன்றிலிருந்து நமது கண்டனத்தை தெரிவித்தும், நமது எதிர்ப்பைக் காட்டியும், நமது போராட்டத்தை நடத்தியும்தான் வருகிறோம். இன்றுவரை அந்தப் போராட்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. 1938-ல் இந்தியை ஆதரித்த ஆச்சாரியாரும் இப்பொழுது எதிர்க்கிறார். ஆனாலும் தபால் துறைகளில் இந்தியை நுழைத்திருக்கிறார்கள்; இராணுவத்தில் புகுத்தியிருக்கிறார்கள்; இரயில்வே நிலையங்களில் எழுதியிருக்கிறார்கள். புது பைசாக்களிலும் இந்திதான். பொது மக்களுக்கு எதிராக இந்தியை நுழைத்துக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வளவை அவர்கள் செய்தும் ஜனநாயகக் கடமையில் அக்கரையுள்ள காங்கிரஸ்காரர்கள் சொல்லக்கூடாதா?—'தமிழ் நாட்டில் இந்தி வேண்டாம்; இந்தியை நுழைக்கக்கூடாது; அதை மக்கள் வெறுக்கிறார்கள்'—என்று!

"ஆனால், அதைச் சொல்ல வில்லைகாங்கிரஸ்காரர்கள்; மாறாக இந்தி நுழைவுக்கு அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள்-வழி வகை செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தமிழ் நாட்டு மக்களாகிய நாம் கேலிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

(4-ம் பக்கம் பார்க்க)

செய்திச் சுருள்

★

சென்னை - மயிலை சிந்தனையாளர் கழகம்

மேற்படி கழகத்தின் 1957-58-ம் ஆண்டுக்கு தோழர்கள் ஏ. வி. இராமன் தலைவராகவும், கே. டி. பாலகிருஷ்ணன் துணைத் தலைவராகவும், தே. நடராசன் - ஆர். சென்ன கேசவலு செயலாளர்களாகவும், எல். லாரன்ஸ் பொருள்ளாளராகவும், 5 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கும்பகோணம் கலைக் கழகம்

கும்பகோணம் கலைக் கழகத்தின் 5-வது வருடாந்திரக் கூட்டம் திரு. டி. ஆர். மணி தலைமையில் நடைபெற்றபோது 1957—58-ம் ஆண்டுக்கு இ. டி. சி. திருவேங்கடம் தலைவராகவும், தோழர்கள் எஸ். கே. அவிநாசிலிங்கம், எல். சீனிவாசன் துணைத் தலைவர்களாகவும், தோழர்கள் எம். சே. கந்தசாமி, பி. கே. டி. சண்முகம் செயலாளர்களாகவும், ஜனாப் ஜே. தாஜுதீன் பொருளாளராகமம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சென்னை தமிழாசிரியர் கழகம்

28—3—57ல் சென்னை தமிழாசிரியர் கழகச் சிறப்புக் கூட்டம், திரு. மயிலை - சிவமுத்து தலைமையில் நடைபெற்றது. மறைந்த திரு. குமாரசாமி ராசாவுக்கு அனுதாபம் - மரியாதை தெரிவித்தும், கழகத்தின் சார்பில் அண்மையில் 'டாக்டர்' பட்ட திரு. ரா. ஆர். பி. சேது பிள்ளையவர்களைப் பாராட்டி விழா நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு ஆர். பி. சேது பிள்ளையவர்களைப் பாராட்டி, கூட்டத் தலைவர் மயிலை - சிவமுத்து, திருவாட்டி எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், திரு. எஸ். எஸ். அருணகிரி நாதர், எம். இராசமாணிக்கனார் ஆகியோர் பேசினர்.

சென்னை—பார்க்டவுன் இளைஞர்முத்தமிழ் மன்றம்

1—4—57 இரவு 8½ மணிக்கு பார்க்டவுன் எண் 2/2, நைனியப்ப நாய்க்கன் தெரு மணி கடையில் மேற்படி மன்றத்தின் உறுப்பினர்சள் தேர்வுக் கூட்டத்தில் தோழர்கள் கே. எம். மணி செயலாளராகவும், நடராசன் துணைச் செயலாளராகவும், தியாகராசன் பொருளாளராகவும், 8 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெற்றி விழா கூட்டமும், ஊர்வலமும் நடத்துவது பற்றியும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

கோவை புதுமலர்ச்சிப் படிப்பகம்

29—3—57 இரவு 10 மணிக்கு, மேற்படி படிப்பகத்தின் செயற்குழு, தோழர் நா. சவுடப்பா தலைமையில் நடைபெற்றபோது, சென்னை சட்டமன்றத்திற்கும்—டில்லி பாராளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. க. தோழர்களைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், படிப்பகத்தின் இரவு பாடசாலை மாணவ—மாணவிகளுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு அழகிரி மன்றம்

24—3—57-ல் மேற்படி மன்றச் சார்பில், கழகப் பணிமனையில், தோழர் மா. சு. முருகசாமி தலைமையில், 'அஞ்சா நெஞ்சன் அழகிரி நினைவு நாள்' கொண்டாடப்பட்டது. தோழர்கள் பலர், மாவீரன் அழகிரியின் அருந்தொண்டினை விளக்கிப் பேசினர்.

பெயர் சூட்டல்

சென்னை - கன்னியப்பா நகர் தோழர் தங்கசாமி அவர்களின் ஆண் மகவுக்கு, தோழியர் சத்தியவாணி முத்து அவர்களால் 'அம்பேத்கார்' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2/ அன்பளிப்பாகத் தரப்பட்டது,

* * *

சென்னை - கன்னியப்பா நகர் தோழர் பூங்காவனம் அவர்களது ஆண் மகவுக்கு 'தாமரைச் செல்வன்' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

தேர்தலில் வெற்றி பெற்ற கழகத் தோழர்களுக்குப் பாராட்டு

★

இராசிபுரம் :

30—3—57 காலை, மக்கள்சபை நாமக்கல் தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பாராட்டி, இராசிபுரம் தி. மு. கழகச் சார்பில் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் கலந்துகொண்ட சம்பத் அவர்களுக்கு பல கிளைக் கழகங்களும், வியாபாரிகளும், தொழிலாளர் சங்கங்களும் வரவேற்பு இதழ் வாசித்தளித்தன. பின்னர் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் நன்றி தெரிவித்துக்கொள்ளப்பட்டதோடு, தேர்தலில் தனக்குப் பேருதவியாக இருந்த திரு. பாதர் அவர்களுக்கு மாலை அணிவித்து, தோழர் சம்பத் அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

விருதை :

31—4—57 மாலை 5 மணிக்கு, விருதை-பாவாலிரோடில் 3-வது வட்டத் தி. மு. கழக முஸ்லீம் தோழர்களால் தோழர் எஸ். பெருமாள் தலைமையில், வெற்றி பெற்றக் கழகத் தோழர்களைப் பாராட்டும்முகத்தான் தோழர் டி. சந்தோஷம் அவர்கள், வீதிகள் எங்கும் கொடியேற்றிவைத்தார்.; வாண வேடிக்கைகளும் நடைபெற்றன; குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டன.

சென்னை-நேப்பியர்பார்க்

27-3-57 பகல் 2 மணியளவில் சென்னை—நேப்பியர் பார்க் (29-வது வட்டம்) தி. மு. கழக சார்பில், தேர்தலில் வெற்றி பெற்ற தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி, வெங்கடேச கிராமணிதெரு—ரிச்சி தெரு— கிருஷ்ணப்பசெட்டி தெரு — குருவப்பசெட்டி தெரு ஆகிய இடங்களில் கஞ்சியும், மாலை 4 மணிக்கு கழகக் கட்டிடத்திலும் மற்றும் நான்கு இடங்களிலும் பால் வழங்கப்பட்டது.

மாலை 6-30 மணிக்கு கழகக் கட்டிடத்திலிருந்து, தோழர் க. அன்பழகன் அவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். ஊர்வலம் நடைபெற்ற எல்லா தெருக்களிலும், தோரணங்கள் வரவேற்பு வளைவுகள்—மின்னொளி விளக்குகள் ஆகியவைகளால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சேலம்—ஓமலூர்

அண்ணா மற்றும் வெற்றிபெற்றக் கழகத் தோழர்களைப் பாராட்டி, ஓமலூர் நகர தி. மு. கழக சார்பில் தோழர் முத்தலீப் தலைமையில் ஓர் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றதுடன் இனிப்புகளும் வழங்கப்பட்டன.

நெல்லை 13-வது வட்டம்

அண்ணா அவர்களும், மற்றும் கழகத் தோழர்களும் வெற்றி பெற்றதைப் பாராட்டி, நெல்லை 13-வது வட்ட தி. மு. கழக சார்பில் தோழர் எம். மஸ்தான் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், கொடியேற்றி வைத்தும்—பாராட்டியும் பலத் தோழர்கள் பேசினர்.

நன்றியறிவிப்பு

சென்னை சட்டசபைத் தேர்தலில் அரூர் தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்கு பல கஷ்டங்களையும் ஏற்று பணியாற்றிய தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் எனது இதயம் கனிந்த வணக்கத்துடன் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணியம் வளரவேண்டும்—ஜனநாயகம் ஓங்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கு என் உளமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பன்,

டி. பொன்னுசாமி

★

ஆடுதுறைத் தொகுதியில் கழகக் கொள்கை வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த தோழர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் தோல்வியுற நேர்ந்தாலும் அயர்சியுறத் தேவையில்லை. பிற்போக்கு சக்திகளையும்—அறியாமை நோயினையும் வீழ்த்திட என்றும்போல் போராடுவேன்—போராடுவோம்! ஆற்றல்மிகு பெரும் படையினையும், அறிவால் சிறந்த படையினையும் அமைத்திடுவோம். துவளாமல்—துயருறாமல் தாயப் பணி ஆற்றுவோம்! நல் இதயமுள்ள பெரியோர்களின் இதயம் துணை நிற்குமாக! அனைவருக்கும் நன்றி.

அன்பன்,

பொ. தருமன்

நடைபெற்ற சென்னை சட்டசபைத் தேர்தலில் புவனகிரி தொகுதிக்கு தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்குப்பேராதரவு தந்து பலன் கருதாது பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும், என்பால் பேரன்புகொண்டு தொண்டாற்றி பொருளுதவியும் நல்கிய மாற்றுக் கட்சி அன்பர்களுக்கும், தொகுதியின் பெரியோர்கள்-தாய்மார்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடல் கடந்து சென்றாலும் தாய் நாட்டுத் தொண்டர்கள்பால் பேரன்புகாட்டி, தேர்தல் நிதி தந்துதவிய மலேயா (சிங்கப்பூர்) நண்பர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

ஆர். பாலகுருசாமி

★

நடைபெற்றத் தேர்தலில் சென்னை சட்ட மன்றத்திற்கு கரூர் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனாகப் போட்டியிட்ட எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும், பணியாற்றிய கழகத் தோழர்கள் — ஆதரவாளர்கள்—நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். என்றும்போல் மக்கள் நலனுக்குப் பாடுபடுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

எம். குழந்தைவேலு

காங்கிரஸ்காரர் ஓட்டு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவேதான் தி. மு. கழகம், தனது கொள்கையை வைத்து இத்தேர்தலில் ஈடுபட்டது.

"திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கையை-தனது இலட்சியத்தை—தனது திட்டங்களை பட்டி—தொட்டியெங்கும் பரப்பி வந்திருக்கிறது. கிராமங்களிலெல்லாம் சொல்லி வந்திருக்கிறது. நகரங்களிலெல்லாம் விளக்கி வந்திருக்கிறது. பொது மக்களுக்கு நம்மை அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் காமராசருக்கு மட்டும் அது எட்டவில்லை.

"எனவேதான், ஜனநாயகக் கடமைகளில் ஒன்றான சட்ட மன்ற நுழைவுமூலம் நமது இலட்சியத்தை எடுத்துச்சொல்ல தேர்தலில் ஈடுபட்டோம்.

"நமது இலட்சியம் நிறைவேறும்வரை—நமது கொள்கையை நிறைவேற்றும்வரை—நமது திட்டங்கள் வெற்றியுறும்வரை திராவிடத்திற்கு நாம் தொண்டாற்றுவோம்."

கம்யூனிஸ்டுகளின் அழைப்பு

'ஏற்பதற்கில்லை' என்கிறது பி. சோ.

'அதிகாரபூர்வமான அழைப்பு இல்லை' என்றும் குற்றச்சாட்டு

கேரளத்தில் கூட்டு மந்திரிசபை அமைக்க வருமாறு கம்யூனிஸ்டுகள் விடுத்த அழைப்பினை ஏற்க, பி. சோ.-க்கள் மறுத்துவிட்டிருக்கின்றனர்.

பம்பாயில் கூடிய பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவினர், 'தேசிய ரீதியில் ஏற்படும் நெருக்கடியான நேரங்களில் மட்டுமே கூட்டு மந்திரிசபை அமைப்பதற்கு தாங்கள் சம்மதிக்க முடியும்,' என்று தங்களின் பழைய முடிவையே திரும்பவும் உறுதி செய்திருக்கின்றனர்.

அழைப்பு இல்லை

"மேலும்,கம்யூனிஸ்டுகள் கேரளத்தில் கூட்டு மந்திரிசபை அமைக்க வருமாறு தங்களை அழைத்திருப்பதாகக் கூறப்படுகிறது; ஆனால் அப்படி அழைப்பு ஏதும், பரிசீலனை செய்யப்படுவதற்கு நம் முன் இல்லை" என்றும் கூறியுள்ளனர்.

★

கூட்டு மந்திரி சபை அமைப்பு பற்றி பி. சோ. கட்சியின் குற்றச்சாட்டு

தீர்மான நகல் அனுப்பப்பட்டது என்கிறார் அஜாய் கோஷ்

புதுடில்லி, ஏப். 9—

கேரளத்தில் தாங்கள் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து கூட்டு மந்திரிசபை அமைக்கவேண்டும் என்று கம்யூனிஸ்டுகளின் கோரிக்கை எதுவும் தங்கள் முன் இல்லை என்று பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு குற்றம் சாட்டியிருப்பதை கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் அஜாய்கோஷ் மறுத்திருக்கிறாராம்.

அவர் கூறுவதாவது:—

"இது உண்மையல்ல; முதலில் இது குறித்து கம்யூனிஸ்டு கட்சியின் பொலிட்பீரோ தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது. இரண்டாவதாக, கேரள மாநில கம்யூனிஸ்டு கட்சி ஒரு தனி தீர்மானமே நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானத்தின் நகல் மாநில பி. சோ. கட்சியினருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

"இதுவே, ஒரு முறையான அழைப்புத்தான். ஏனெனில் கேரள கம்யூனிஸ்டு கட்சியினர் தான் மந்திரிசபை அமைக்கின்றனர்."

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

1,400 அடி சினிமா படம் பிடித்துக்கொள்ளவும், அதனை நாடெங்கிலும் திரையிட்டுக் கொள்ளவும் அனுமதி தந்தது இந்த சர்க்கார்! கழகத்தைச் சேர்ந்த எங்கள் பெயர்கள்கூட சினிமாவில் வரக்கூடாது என்று கூறுகிற இந்த சர்க்கார், 'காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள்,' என்று பிரச்சாரம் செய்யும் படத்தை அனுமதித்தது.

அனுசரணை

"இப்படி ஆளும் கட்சியான காங்கிரசுக்கு மட்டும் இந்த சர்க்கார் எல்லா வசதிகளையும் செய்து தந்து, அனுசரணையாக நடந்துகொண்டுவிட்டு, தேர்தலை நடத்திவிட்டோம் என்று கூறினால் நடைபெற்றது ஜனநாயகத் தேர்தலா? இந்த இலட்சணத்தில் நேர்மையற்ற—நியாயமற்ற—பாரபட்சமான வகையில் நடைபெற்ற தேர்தலை எப்படி ஜனநாயகத் தேர்தல் என்று கூற முடியும்?

"இப்படி காங்கிரசுக்கு மட்டும் தரப்பட்ட வாய்ப்புகள்—வசதிகள்—அதிகார ஆதிக்க பலம் இவற்றை எல்லாம் தாண்டி அல்லவா நாங்கள் 15 இடங்களைப் பிடித்திருக்கிறோம்? இந்த வெற்றி எப்படி சாதாரணமான வெற்றியாகிவிட முடியும்?"

வேலியே பயிரை மேய்ந்தால்!

"ஒரு அணுவுக்கு ஆறு 'நயா பைசா'; இரண்டு அணுவுக்கு 12 நயா பைசா என்றும் பட்டியல் போட்டுத் தந்தது, இந்த சர்க்கார்தான்! ஆனால், இதே சர்க்கார், இரண்டணு விலைக்குத் தந்துவந்த ஒரு அஞ்சல் உறையை, இப்போது 13 நயா பைசா என்று விற்கிறது.

"இரண்டணுவிற்கு 12 நயா பைசா தான் என்று கூறிய சர்க்காரே, பதின்மூன்று நயா பைசா என்று விலையை ஏற்றினால், என்ன சர்க்கார் — என்ன ஜனநாயகம் வாழுகிறது? வேலியே பயிரை மேய்ந்தால், ஆடும் மாடும் மேய்வதற்குக் கேட்கவா வேண்டும்?

"இந்த பைசா மாற்றத்தால் சர்க்காரே விலைகளை ஏற்றிக்கொண்டால், வியாபாரிகள் விலை ஏற்றுமல் என்ன செய்வார்கள்?

"சர்க்காரின் இந்தப் போக்கு; நியாயமானதா? நேர்மையானதா? சர்க்கார் என்பதற்கு வரம்பே கிடையாதா? எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் ஒருசர்க்கார் நடந்துகொள்ளலாமா? பிறகு, சர்க்காருக்கும்—பொறுப்புள்ள ஒரு சர்க்காருக்கும் இதாருக்கும் வேறுபாடுதான் என்ன?

"இந்த சர்க்காருக்கு, தான் நிர்ணயித்த இரண்டு அணுவுக்கு 12 நயா பைசா என்ற நிர்ணயத்தில் தனக்கே நம்பிக்கை இல்லை என்றால், வேறு யாருக்கு நம்பிக்கை பிறக்கும்?

"நாணயமான சர்க்காராயிருந்தால், தான் கூறியதைத் தானே மறுத்துவிட்டு, 13 நயா பைசா விலை விற்குமா?

காசுகள் என்றே அழையுங்கள்

"'நயா பைசா' என்பது ஒருமையாம்! 'நயே பைசே' என்பது பன்மையாம்! இவை இரண்டும், இந்திச் சொற்கள். பைசா மாற்றத்திலும் கூட இந்திதான் இடம் பெறுகிறது. எனவே, இனி நாம் 'நயா பைசா' என்றோ, 'நயே பைசே' என்றோ அந்த நாணயத்தை அழைக்கக் கூடாது. புதிய காசு—காசுகள் என்றே சொல்லவேண்டும்.

"இன்றில்லாவிட்டாலும் நாளாவட்டத்தில் நாம் பழக்கப்படுத்திக் கொள்ளுகிற இந்த 'காசு'கள் என்ற சொல், கட்டாயம் அமுலுக்குவரும்; தோழர்கள் ஒவ்வொரு நேரத்திலும் 'காசுகள்' என்றே சொல்லவேண்டும்; 'நயா பைசா' என்று கூறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்."

கைதிகள் தண்டனைக் காலம் குறைகிறது

பொதுவுடைமையர் ஆட்சியில் புதியதோர் உத்திரவு

திருவனந்தபுரம், ஏப். 10—

கேரள மாநிலத்தில் சாதாரண கைதிகளுடைய தண்டனைக் காலத்தைக் குறைத்து உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது:—

மூன்று திங்களுக்குக் குறைவாக தண்டனை அனுபவிக்க வேண்டியவர்கள் உடனே விடுதலை செய்யப்படுவர்.

மூன்று திங்கள் முதல் ஓராண்டுவரை தண்டனை பெற்றவர்களின் காலத்தில் $1\frac{1}{2}$ மாதம் குறைக்கப்படும்.

ஓராண்டு முதல் 5 ஆண்டுக் காலம்வரை தண்டனை பெற்றவர்களின் காலம் 3 திங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டு முதல் 10 ஆண்டுக் காலம் தண்டனை பெற்றுள்ளவர்களுக்கு 6 மாதகாலம் குறைக்கப்பட்டுள்ளது.

10 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்திற்குத் தண்டனையும், ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டவர்களுக்கு ஓராண்டுத் தண்டனை குறைக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தண்டனைக் குறைப்புக்குப் பிறகும் மீதியுள்ள தண்டனைக்காலம் 3 மாதத்திற்குக் குறைவாக இருந்தால் அக்கைதிகள் விடுதலை செய்யப்படுவர்.

கம்யூனிஸ்டுக் கைதிகளின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஏற்கனவே உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னாள் மந்திரிகள் மீது இலஞ்சக் குற்றம்

கேரள சர்க்கார் நிலை

'சில முன்னாள் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட இலஞ்சக் குற்றச்சாட்டுகள் பற்றி கம்யூனிஸ்டு மந்திரி சபை விசாரணை செய்யுமா?' என்று கேரள முதலமைச்சரை வினவியபோது, அவர், எந்தக் குறிப்பிட்ட நபர் மீதும் வழக்குத் தொடரப்பட்டால்—அவர் முன்னாள் மந்திரியாக இருந்தாலும் தற்போதுள்ள மந்திரியாக இருந்தாலும்—விசாரிக்கப்பட்டே தீருவர்' என்றார்.

தொழில் கல்வி வகுப்புகள்

★

1957 மே மாதம் 1-ம்தேதி முதல் ஜூன் மாதம் 9-ம் தேதிவரை **ஆடோமோபைல் ஸர்வீஸ் என்ஜினீயரிங், ரேடியோ ஸர்வீஸ் என்ஜினீயரிங்** ஆகிய, ஆறு வார வகுப்புகள் நடத்தப்படும். S. S. L. C. யும் அதற்கு மேலும் படித்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். ஒரு சில மாணவிகளுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படும். பிராஸ்பக்டஸுக்கு I. L. W. A. Ltd., கோபால் பாக், கோயமுத்தூர் என்று எழுதவும்.

போன் 40
தந்தி: "ILWA"

G. D. NAIDU,
பிரஸிடெண்ட்.

இலங்கை தி. மு. க. தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தல்

"இலங்கை திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தல் 21—4—57-ல் நடைபெறும். புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏப்ரல் திங்கள் 20, 21-ம் நாட்களில் இ. தி. மு. கழகத்தின் பொதுக்குழு, கொழும்பு-லாயிட்ஸ், பிராட்வே நாராயண குரு மண்டபத்தில் கூடும்.

"தேர்தல் அலுவல்களைக் கவனிக்க தேர்தல் அதிகாரியாக தோழர் ஜே. சோமசுந்தரம் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

"இ. தி. மு. கழகத்தின் சட்டத்திட்டப்படி, பொதுச்செயலாளர் பதவிக்கு வருகிற விண்ணப்பப் பத்திரங்களை 15—4—57-ம் நாள் வரை ஏற்று தேர்தல் அதிகாரி பரிசீலனை செய்வார்"

என்று இலங்கை தி. மு. கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

அண்ணா

சுற்றுப் பயணம்

ஏப். 12: வேளியூர்
13: திருவள்ளூர் கலைக் கழகம்
14: குளித்தலை
15: காலை — மாயவரம்;
,, மாலை — பொன்மலை திருச்சி
16: பெரம்பலூர்
17: நெல்லிக்குப்பம்
18: விருத்தாசலம்
19: தம்மம்பட்டி
20: ஆரணி (வ. ஆ.)
21: சென்னை

20,000 குடிசைகள் தீக்கிரையாயின!

தீவிபத்தினால் 5 இலட்சம் மக்கள் பரதவிப்பு

இரங்கூன், ஏப். 9—

இரங்கூன் நகர்ப்புறத்தில் குடிசை ஒன்று தீப்பற்றிய காரணத்தால் ரூ. 3 கோடி சேதம் ஏற்பட்டிருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

'பெட்ரோல் அடுப்பு' (ஸ்டவ்) மூலம் ஒரு குடிசையில் ஏற்பட்ட தீ வெகுவேகமாக பரவி 20,000 குடிசைகளையும் தொழிற்சாலைகளையும் மண்மேடாக்கிவிட்டதாம்!

இத் தீ விபத்தினால் 20 பேர் மாண்டனர் என்றும், 5 இலட்சம் பேர் வீடிழந்து தவிக்கின்றனரென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

இறந்தவர்களில் நான்கு குழந்தைகளும் உள்ளனவாம்; தீயிலிருந்து தப்புவதற்காக ஓடிய மக்களின் காலடியில் மிதிபட்டு இவை மாண்டனவாம்.

தண்ணீர் இல்லாததால், தீயை அணைக்கமுடியவில்லையாம். சுமார் ஐந்து மணி நேரம் எரிந்த பின், தீ தானாகவே தணிந்து விட்டதாம்.

கழகக் கூட்டங்கள்

★

கருங்குழி:
13—4—57 மாலை 6-மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
தலைவர்: தி. ந. சம்பந்தம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஆர். எஸ். பாண்டியன்

★

மேலப்பாளையம்:
5-ம் பீடிக் கம்பெனி முன்பு
12—4—57 இரவு 8-மணிக்கு
பேசுவோர்;
சி. பி. சிற்றரசு
சே. கா. மு. யூசப்
கே. ஓ. எச். காசா

★

ஆத்தூர்:
கே. வி. கே. சாமி திடலில்
12-4-57 மாலை 5-30 மணிக்கு
தலைவர்: இரா. கந்தவடிவேல்
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி
மா. மாணிக்கம்
கணேசன்
(இரவு 10-மணிக்கு 'மரண ஓலம்' நாடகம் நடைபெறும். கட்டணம் இல்லை.)

★

டி. களத்தூர்: (துறையூர்)
12-4-57 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: எஸ். வி. கிருட்டிணசாமி
பேசுவோர்:
என். வி. நடராசன்
அம்பில் தர்மலிங்கம்
ஏ. கலியபெருமாள்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

"12-4-57 மாலை 6-மணிக்கு செங்கற்பட்டு மாவட்ட செயற்குழு அவசரக் கூட்டம் குன்றத்தூரில், மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறும். அனைவரும் குறித்த நேரத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்"

என்று செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் தி. ந. சம்பந்தம் அறிவிக்கிறார்.

சென்னை-வண்ணையம்பதி இளங்கோ கலைமன்றம்

11—4—57 மாலை 6-30 மணிக்கு, மேற்படி மன்றச் சார்பில் நாராயணப்ப நாய்க்கன் தோட்டம் 8-வது சந்தில் (கருணாகரர்ஸ் சமீபம்) தோழர் டி. பி. சுந்தரம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், எஸ்.எஸ். தென்னரசு, என். சீவரத்தினம் மற்றும் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை.) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.